SPL.C.C.No.1/2025 தேதி .11.09.2025.

அ.சா.13 – பூமிநாதன்

**<u>1ம் எதிரி தரப்பு குறுக்குவிசாரணை தொடர்ச்சி –</u>**

B வகைப்படுத்தப்பட்ட அரசு அதிகாரிகளுக்கு பொறி வைத்து பிடிக்கும் நடவடிக்கை எடுக்க காவல் ஆய்வாளருக்கு அதிகாரம் வழங்கப்படவில்லை என்றால் சரியல்ல. கைது நடவடிக்கைக்கு மட்டும் அதிகாரம் வழங்கப்படவில்லை.

முதல் நிலை விசாரணை மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட விபரங்கள் விருதுநகர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதா என்றால் பிரிவின் தலைவர் என்ற முறையில் வாய்மொழியாக தகவல் தெரிவிக்கப்பட்டது. அன்றைய தினம் காவல் துணைக்கண்காணிப்பாளர் விருதுநகர் பிரிவு அலுவலகத்தில் தான் இருந்தார் என்றால் ஞாபகம் இல்லை.

பொறி வைத்து பிடிக்கும் நடவடிக்கை தொடங்குவதற்காக அருப்புக்கோட்டை செல்வதற்கு முன்பு துணை காவல் கண்காணிப்பாளரிடம் தகவல் தெரிவித்துவிட்டு தான் சென்றேனா என்றால் தகவல் தெரிவித்துவிட்டு தான் சென்றேன். பொறி வைத்து பிடிக்கும் நடவடிக்கைகளை நானே மேற்கொள்வதற்கு சிறப்பு காரணங்கள் உள்ளதா என்றால் அவ்வாறு இல்லை.

அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலகத்தில் பெரும்பாண்மை சமூகத்தை சேர்ந்தவர்களுக்கு இணக்கமாக 1ம் எதிரி செயல்படவில்லை என்பதால் இந்த வழக்கின் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதன் காரணமாக அரசியல் அழுத்தம் கொடுக்கப்பட்டு எங்கள் துறை கையேடு விதிகளுக்கு புறம்பாக முதல் நிலை விசாரணை, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

B அலுவலர்களை பொறுத்து பொறி வைத்து பிடிக்கும் நடவடிக்கைகளை காவல் துணைக்கண்காணிப்பாளர் தான் மேற்கொள்ள வேண்டும் என்றும்,

அவசியம் ஏற்பட்டால் மட்டுமே ஆய்வாளர் மேற்படி நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்றும் அந்த வகையில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு இயக்குனரிடம் அனுமதி பெறவேண்டும் என்றும், அவ்வாறு அனுமதி பெற்றாலும் கைது நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலாது என்றும், எங்கள் துறை கையேடு Part 6 பிரிவு 41(3) ன் கீழ் வரையறுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால் தான் இயக்குனரின் அனுமதியோடு பொறி வைக்கும் நடவடிக்கையை மேற்கொண்டு கைது நடவடிக்கைக்கு காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்களுக்கு தகவல் தெரிவித்து அதன்பேரில் மேற்படி எதிரிகளை காவல் துணைக்கண்காணிப்பாளர் கைது செய்து நடவடிக்கை மேற்கொண்டார். அவ்வாறு இயக்குநரிடம் பெற்ற அனுமதியானது இந்தவழக்கில் ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் தாக்கல் செய்யப்படவில்லை. வாய்மொழியான அனுமதி தான் பெறப்பட்டுள்ளது. காவல் துணைக்கண்காணிப்பாளரால் பொறி வைத்து பிடிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளாத வகைக்கு சிறப்பு காரணங்கள் ஏதும் நான் பதிவு செய்துள்ள ஆவணங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளதா என்றால் தெரிவிக்கப்படவில்லை. அவ்வாறு தனிப்பட்ட காரணங்கள் ஏதும் காண்பிக்கும் வழக்கம் இல்லை. பிரிவில் உள்ள புலன்விசாரணை அதிகாரிகளின் எண்ணிக்கை அடிப்படையில் சுழற்சி முறையில் பொறி வைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. நான் சொல்வது போல் சுழற்சி முறையில் பொறி வைப்பு நடவடிக்கை மேற்கொள்ளமுடியாது என்றால் சரியல்ல.

பொறி வைத்து பிடிக்கும் நடவடிக்கை எடுக்க ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் அல்லது குற்றவியல் நடைமுறை சட்டத்தின் கீழ் பினாப்தலின் பரிசோதனை நிர்ணயிக்கப்பட்டுள்ளதா என்றால் சரியல்ல. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குனரக கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. கையேட்டில் கூறப்பட்டுள்ள அறிவுரைகளை பின்பற்றவேண்டுமா என்றால் பின்பற்றவேண்டும்.

முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தபிறகு பொறி வைத்து பிடிக்கும் நடவடிக்கை துவங்குவதற்கு முன்பாக புகார்தாரரின் முன்விரோதம் அரசு ஊழியரின் நேர்மை நடவடிக்கைகள் மற்றும் வழக்கு சம்பந்தப்பட்ட விசயத்தின் முதல் நிலை உண்மைத்தன்மை ஆகியவை குறித்து நான் ரகசிய விசாரணை செய்து அதன்பிறகு பொறி வைத்து பிடிக்கும் நடவடிக்கை துவங்கவேண்டும் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பாகவே மேற்படி விசயங்கள் குறித்து நான் விசாரித்தேன். நான் மேற்கொண்ட நடவடிக்கைகள் தொடர்பாக என்னால் சேகரிக்கப்பட்ட ஆவணங்களை நான் அடுத்த புலன்விசாரணை அதிகாரியிடமோ அல்லது நீதிமன்றத்திற்கோ அனுப்பிவைத்துள்ளேன் என்றால் சரிதான்.

அசா 2 சோமசுந்தரம் என்பவர் அசா 12 சுப்பாரெட்டியாரிடம் பணிபுரிந்த வகைக்கும் நகராட்சியில் ஒப்பந்தப்பணி மேற்கொண்ட வகைக்கும், பகுதி தொகை பெற்றுக்கொண்ட வகைக்கும், ஏதேனும் ஆவணங்கள் உள்ளதா என்று அசா 2 யிடம் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பாக கேட்டேனா என்றால் கேட்டேன். அவர் அது தொடர்பான சில ஆவணங்களின் நகல்களை என்னிடம் காண்பித்தார். மேற்படி விசயம் எனது முதல் தகவல் அறிக்கை மற்றும் ஒப்படைப்பு மகஜரிலும் கூறப்படவில்லை என்றால் சரிதான். முதல் நிலை விசாரணைக்காக அவரிடம் பெற்று பார்வையிட்டதால் மேற்படி விசயங்கள் முதல் தகவல் அறிக்கையிலும் ஒப்படைப்பு மகஜரிலும் கூறப்படவில்லை. அவ்வாறு என்னிடம் காண்பிக்கப்பட்ட ஆவணங்களின் நகல்கள் நான் விசாரணை செய்த முதல் விசாரணை கோப்பில் உள்ளதா என்றால் இல்லை.

எங்கள் பிரிவு அலுவலகத்திலிருந்து கிழக்கு திசையில் அருப்புக்கோட்டை நகர் சுமார் 25 கிமீ தொலைவில் உள்ளது என்றால் எங்களது விருதுநகர் அலுவலகத்திலிருந்து அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலகம் சுமார் 25 கிமீ தொலைவில் உள்ளது. அருப்புக்கோட்டை நகராட்சி அலுவலகத்திலிருந்து திருவில்லிபுத்தூர் நீதிமன்றத்திற்கு வரவேண்டும் என்றால் மேற்கு திசையில்

சுமார் 68 கிமீ இருக்கும் என்றால் சரிதான்.

இந்த வழக்கின் முதல் விசாரணையை சுமார் 5 மணி நேரம் வரை நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சுமார் 3.15 மணி நேரம் ஆனது. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததிலிருந்து எதிரிகளின் வீட்டை சோதனை செய்து முடிக்கும் வரை சுமார் 9.30 மணி நேரம் ஆனது என்றால் சரிதான். இடையில் பயண நேரம், எதிரிகளை விசாரித்த நேரம், ஆவணங்களை கைப்பற்றிய நேரம், மாதிரி கரைசல் பரிசோதனை மற்றும் எதிரிகளை உள்ளடக்கிய கரைசல் பரிசோதனை, எதிரிகளின் வீட்டை சோதனை செய்த நடவடிக்கைகள், எதிரிகளை காவல் நிலையத்தில் கைது செய்ததன் பின்தொடர்ச்சியாக பராமரிக்கப்பட்ட ஆவணங்களை தயார் செய்ததும் உள்ளடங்கும் என்றால் சரிதான். நான் தயார் செய்த சாட்சிகளுக்கான வேண்டுகோள் கடிதங்கள் அசாஆ 24 மற்றும் 25, அசாஆ 4 ஒப்படைப்பு மகஜர், அசாஆ 6 கைப்பற்றுதல் மகஜர், அசாஆ 7 பார்வை மகஜர், அசாஆ 8 வரைபடம், அசாஆ 9, 10 வீடு சோதனை ஜாபிதாக்கள், படிவம் 95, ஆகிய ஆவணங்களை நான் தயார் செய்துள்ளேன். மேற்கண்ட ஆவணங்களை தயார் செய்வதற்கே 9.30 மணி நேரம் கால அவகாசத்திற்கு மேல் ஆகும் என்று சொன்னால் சரியல்ல.

அசாஆ 24, மற்றும் 25 வேண்டுகோள் கடிதங்களை கொடுப்பதற்கு முன்பாகவே சம்பந்தப்பட்ட துறை உயர் அதிகாரிகளுக்கு தொலைபேசி மூலம் தகவல் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு நான் தொலைபேசி மூலம் தகவல் தெரிவித்தேன் என்ற விபரம் அசாஆ 24 மற்றும் 25ல் கூறப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ஆனால் ஒப்படைப்பு மகஜர் அசாஆ 4 ல் கூறப்பட்டுள்ளது. அசாஆ 4 ல் அவ்வாறு பொய்யாக கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அசாஆ 24 மற்றும் 25 வேண்டுகோள் கடிதங்களை எனது பிரிவு காவலர் மூலம் கொடுத்தனுப்பவில்லை என்றால் சரியல்ல.

அசா 3 மற்றும் அசா 4 அரசு சாட்சிகள் என் முன்பாக ஆஜராவதற்கு சம்பந்தப்பட்ட துறை மேலதிகாரியிடமிருந்து அறிமுகக்கடிதம் பெற்று

வந்தார்களா என்றால் இல்லை. ஆனால் என்னிடம் ஆஜரானபோது அவர்களை அறிமுகம் செய்துகொண்டு ஆஜர் ஆனார்கள். நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் வேண்டுகோள் கடிதங்கள் கொடுக்கவில்லை என்றாலும் அசா3 மற்றும் அசா 4 அரசு சாட்சிகள் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் ஆஜராகவில்லை என்றாலும் சரியல்ல. அசா3 மற்றும் 4 ஆகியோர்களிடம் முதல் தகவல் அறிக்கை நகல் கொடுக்கப்படவில்லை என்றும், அசா 2 யிடம் மேற்படி அரசு சாட்சிகள் முதல் தகவல் அறிக்கையில் கூறப்பட்டுள்ள விபரங்கள் குறித்து விசாரிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

மாதிரி கரைசல் பரிசோதனைக்கு உபயோகப்படுத்தப்பட்ட பினாப்தலின் பவுடர் இருப்பு நிலவரம் குறித்து எனது அலுவலகத்தில் ஆவணங்கள் பராமரிக்கப்பட்டு வருகின்றதா என்றால் பராமரிக்கப்பட்டு வருகிறது. பினாப்தலின் பவுடர் ஊழல் தடுப்பு இயக்குனர் அலுவலகத்திலிருந்து பிரிவு அலுவலகத்திற்கு அனுப்பப்படுகிறது என்றால் சரிதான். ஒவ்வொரு கரைசல் பரிசோதனைக்கும் எவ்வளவு பினாப்தலின் பவுடர் உபயோகப்படுத்தப்படவேண்டும் என்று கேட்டால் ஒரு கரைசல் தயார் செய்வதற்கு தேவைப்படும் அளவு எடுத்து உபயோகப்படுத்தப்படுகிறது. எங்கள் வழிகாட்டி கையேட்டில் அதற்கான குறைந்தபட்ச அளவு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றால் அதுகுறித்து ஆவணங்களை பார்த்து தான் சொல்ல இயலும். கரைசல் பரிசோதனைக்கு தண்ணீர் எவ்வளவு அளவு எடுத்துக்கொள்ளவேண்டும் என்று எங்கள் கையேட்டில் கூறப்பட்டுள்ளதா என்றால் சரியாக ஞாபகம் இல்லை. மாதிரி கரைசல் பரிசோதனை நான் சொன்ன விதத்தில் நடத்தப்படவில்லை என்றால் சரியல்ல. சாட்சிகளுக்கு அறிவுரை ஏதும் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

ஒவ்வொரு மாதாந்திர ஆய்வு கூட்டங்களிலும் உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற தீர்ப்புகளை சுட்டிக்காட்டி எங்களுக்கு அறிவுரைகள் வழங்கப்படும் என்றால் சரிதான். சிசிடிவி சாட்சியங்கள் பற்றிய அறிவுரைகள்

வழங்கப்பட்டுள்ளதா என்றால் வழங்கப்பட்டுள்ளது. பொறி வைத்து நடவடிக்கை துவங்குவதற்கு முன்பாக சம்பந்தப்பட்ட அரசு அலுவலகத்தில் சிசிடிவி அமைப்பு பொருத்தப்பட்டுள்ளதா என்றும் அது இயக்கத்தில் உள்ளதா என்பது குறித்தும் தெரிந்து கொள்ளவேண்டும் என்றால் சரியல்ல. சிசிடிவியை அரசு அலுவலகங்களில் பொருத்தப்படவேண்டும் என்றும், அதனால் குற்றங்களின் எண்ணிக்கை குறையும் என்றும் காவல் துறை தலைவரால் அரசுக்கு கடிதம் அப்போது எழுதப்பட்டதா என்றால் ஞாபகம் இல்லை.

(1ம் எதிரி தரப்பில் வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது. )

Taken down by me open court read over to the witness in the presence of accused and admitted by the witness to be correct.

Principal District and Sessions Judge,
Virudhunagar District at
Srivilliputtur.